## பாளி மற்றும் பௌத்த கல்வி பட்டப்பின் படிப்புகள் நிறுவகம் - 2015

களனி பல்கலைக்கழகத்துடன் இணைந்த பாளி மற்றும் பௌத்த கல்வி பட்டப்பின் படிப்புகள் நிறுவகத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 18 ஆம் பிரிவின் பிரகாரம் விதிக்கப்பட்ட 1979 இன் 08 ஆம் இலக்க பாளி மற்றும் பௌத்த கல்வி பட்டப்பின் படிப்புகள் நிறுவகத்தின் ஏற்பாடுகளின் 23 ஆம் பிரிவு, பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 107(5) ஆம் உபபிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டை பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிசெய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கிறாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 111 ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

களணி பல்கலைக்கழகத்துடன் இணைந்த பாளி மற்றும் பௌத்த கல்வி பட்டப்பின் படிப்புகள் நிறுவகத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம்

இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் பிரகாரம் நன்கொடைச் சொத்துக்கள் காலக்கழிவு செய்யப்பட வேண்டிய போதிலும், 2012 ஆம் ஆண்டின் போது நன்கொடையாகக் கிடைத்த ரூபா 9,100,000 பெறுமதியான வான் வாகனமொன்று குறித்த பிரகாரம் பெறுமானத்தேய்வு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், காலக்கழிவு 2015 ஆம் ஆண்டிற்கு மாத்திரமே மேற்கொள்ளப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியில் சொத்துக்களின் கொண்டுசெல்லும் பெறுமதி ரூபா 2,123,334 ஆக இருந்த போதிலும், அது பிரதிநிதித்துவப்படுத்திய நன்கொடைக் கணக்கின் மீதி ரூபா 7,280,000 ஆகக் காணப்பட்டது.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

நிலையான வைப்புக்களுக்காக மீளாய்வாண்டின் இறுதியில் கிடைக்க வேண்டிய வட்டி ரூபா 44,824 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அலுவலக தளபாட உபகரணங்கள், புத்தகங்கள், சஞ்சிகைகளின் பெறுமதிக்கும் நிலையான சொத்துப் பதிவேட்டிற்கும் இடையே ரூபா 2,896,803 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இனங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| நிதிப்பிரமாணம் 757(2)அ | மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்ட நூலகப் புத்தக மெய்மையாய்வு அறிக்கை 2016 யூன் 30 வரையிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஆ) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவகங்களுக்கான தாபனவிதிக் கோவையின் XX ஆம் அத்தியாயத்தின் 3(1) ஆம் பிரிவு மற்றும் X ஆம் அத்தியாயத்தின் 1.6.1 ஆம் பிரிவு | கல்விசார் பதவியணியினரின் வருகை, வெளிறேல் மற்றும் விடுமுறை என்பவற்றை உறுதிப்படுத்தாமல் மீளாய்வாண்டில் கல்விசார் பதவியணியினருக்காக சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 14,347,377 தொகை செலுத்தப்பட்டிருந்தது. |
| (இ) | 1994 யூன் 14 ஆம் திகதிய 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களச் சுற்றறிக்கை | 2014 மார்ச் 26 ஆந் திகதிய 06/2014 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் நிறுவக சுற்றறிக்கை கடிதத்தின் பிரகாரம் திறைசேரியின் அங்கீகாரமின்றி உபசரிப்புச் செலவின மீளளிப்பிற்குப் பதிலாக சம்பளத்தின் அடிப்படையில் உபசரிப்புச் செலவினப் படியாக ரூபா 178,955 தொகை செலுத்தப்பட்டிருந்தது. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் ரூபா 6,971,036 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 781,671 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் பற்றாக்குறை ரூபா 6,189,365 இனால் அதிகரித்திருந்தது. மீளாய்வாண்டின் வருமானத்தை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 3,043,320 தொகை அதிகரித்திருந்த போதிலும் ஊழியர் ஊதியம் ரூபா 5,106,340 இனாலும், ஏனைய செலவினம் ரூபா 4,008,985 இனாலும் அதிகரித்தமை மேற்கூறப்பட்ட பற்றாக்குறையின் அதிகரிப்பு தொடர்பில் விஷேடமாகத் தாக்கமளித்திருந்தது.

மீளாய்வாண்டினதும் கடந்த 4 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2011 ஆம் ஆண்டில் நிறுவகத்தின் நிதி விளைவுகளில் மிகையொன்று காணப்பட்ட போதும், அதன் பின்னர் தொடர்ச்சியாகவும் கிரமமாகவும் அதிகரிக்கும் பற்றாக்குறையொன்றிற்கு உள்ளாகியிருந்தது. எவ்வாறாயினும், ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றைச் சீராக்கியதன் பின்னர் பங்களிப்பு நேர்ப்பெறுமதியைக் கொண்டிருந்ததுடன் அது மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 29,817,441 ஆக இருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

மாணவர்களை உள்ளீர்ப்புச்செய்து பாளி மற்றும் பௌத்த விடயத் துறைகள் தொடர்பான பட்டப்பின்படிப்பு அறிவுறுத்தல்கள், பயிற்சியளித்தல் மற்றும் ஆராய்ச்சிக்கான நடவடிக்கைகளைத் திட்டமிடல், பட்டப்பின் பட்டம், டிப்ளோமா சான்றிதழ், சான்றிதழ் பத்திரம் மற்றும் ஏனைய கலைத்திறன்களை மதிப்பிடல் மற்றும் வழங்குவதற்கு தகைமைபெற்ற நபர்களை பல்கலைக்கழகத்திற்கு சிபாரிசு செய்தல் மற்றும் பதவியை ஏற்படுத்துதல், இடைநிறுத்துதல் அல்லது பதவிவறிதாக்கல் தொடர்பாக பல்கலைக்கழகத்திற்கு சிபாரிசு செய்தல் என்பன நிறுவகத்தின் பிரதான நோக்கங்களாகும்.

செயலாற்றல் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நிறுவகத்தினால் 2015 ஆம் ஆண்டிற்காக அடைந்து கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட 26 நோக்கங்களுடன் செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நோக்கங்களில் 18 ஐ ஆண்டின் போது பூர்த்தி செய்யக்கூடியதாக இருந்தது. தற்போது 05 செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டுக் கொண்டிருந்ததுடன் 03 செயற்பாடுகளை ஆண்டின் போது அமுல்ப்படுத்துவதற்கு முடியாதிருந்தது. எவ்வாறாயினும் இந்த செயல்நடவடிக்கைத் திட்டத்திலிருந்து அடைந்து கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட செயற்பாடுகளுக்கான பௌதீக மற்றும் நிதிச் செயன்முன்னேற்றம் தொடர்பான தகவல்கள் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கல்விசார் செயலாற்றல் தொடர்பாக கவனத்தில் கொள்ளும் போது நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட 07 பாடநெறிகளுக்குரிய 03 வருட பொழிப்புத் தகவல்களை பரீட்சித்த போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) கடந்த இரண்டு வருடங்களை ஒப்பிடும் போது ஒட்டுமொத்த மாணவர்களின் பதிவுகளில் கவனத்தில் கொள்ளக்கூடிய குறைவைக் காண்பிக்காததுடன் மாணவர் பதிவு செய்த பாடநெறிகளின் பிரகாரம் ஒப்பிடும் போது பௌத்தக் கற்கை முதுகலைமானி பட்ட பாடநெறிக்காக அதிகளவான எண்ணிக்கையான மாணவர்கள் பதிவு செய்திருந்தனர்.

(ii) பௌத்த கற்கை முதுமானி தத்துவவியல் பட்டம் (M.Phill) மற்றும் பௌத்த கற்கை கலாநிதிப் பட்டம் (Ph.D) பாடநெறிகளைப் பின்பற்றிய 215 ஆன மொத்த மாணவர் எண்ணிக்கையில் மீளாய்வாண்டின் போது பட்டத்தைப் பூர்த்தி செய்த மாணவர்களின் எண்ணிக்கை 06 மாத்திரமாக இருந்ததுடன் இதற்காக அநேகமான விண்ணப்பதாரர்கள் வேலைகளில் ஈடுபட்டிருக்கின்ற நபர்கள் ஆனமை அந்த நிலைமைக்கு காரணமாக இருந்ததாக கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

(இ) ஆராய்ச்சி உதவிக்காக வருடாந்த பாதீட்டின் மூலம் ரூபா 650,000 தொகையான நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், ஆண்டின் போது விரிவுரையாளர்களினால் ஆராய்ச்சி நிதிஉதவி கோரப்பட்டிருக்கவில்லை. ஆண்டின் போது கல்விசார் மற்றும் கல்விசாரா பதவியணியினிரில் 06 உத்தியோகத்தர்களுக்காக ரூபா 1,341,406 தொகை ஆராய்ச்சிப்படியாகச் செலுத்தப்பட்டிருந்ததுடன் ஆராய்ச்சி கலந்துரையாடல் நடாத்தப்பட்டிருக்க வில்லை.

**4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இந்த நிறுவகம் ஆரம்பிக்கப்பட்டது முதல் 37 வருட காலம் வாடகைக் கட்டிடத்தில் நடாத்திச் செல்லப்பட்டதுடன் நிறுவகத்திற்கு நிரந்தரக் கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்காக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டின் போது கட்டிட வாடகையாக ரூபா 8,410,413 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) பாளி மற்றும் பௌத்த கல்வி பட்டப்பின் படிப்புகள் நிறுவகத்தினால் நடாத்தப்படுகின்ற 05 மேலதிக பாடநெறிகளுக்காக பெறப்படுகின்ற வருமானத்தில் வெவ்வேறு விலை வீதங்களின் அடிப்படையில் ரூபா 2,356,049 தொகை நிறுவகத்தின் அபிவிருத்தி நிதியத்திற்கு முகாமைத்துவ சபை அங்கீகாரத்தின் அடிப்படையில் மாற்றப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும் பாடநெறி வருமானத்தில் மீளாய்வாண்டில் ரூபா 441,000 தொகையொன்று ஊழியர்களின் தனிப்பட்ட நலன்களுக்காக நலன்புரி நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

(இ) 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு களஞ்சிய முற்பணக் கணக்கின் மீதிகளுக்கும் களஞ்சியப் பேரேட்டின் பிரகாரமான இருப்பு மீதிகளுக்கும் இடையேயான வேறுபாடு ரூபா 69,347 ஆகும். இந்த இருப்புச் சீராக்கக் கணக்காக தொடர்ச்சியாக கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் முறையான அங்கீகாரத்தின் அடிப்படையில் இருப்பிற்கு தேவையான சீராக்கங்களைச் செய்து பொருத்தமான செயற்பாடுகளை எடுப்பதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.3 செயற்பாட்டு நடவடிக்கைகள்

நிறுவகத்தினால் 2015 செப்தெம்பர் 01 ஆந் திகதி கல்வி கலைத்துறைக் கோவையின் ஒரு பிரதிக்காக ரூபா 350.50 கிரயத்தைச் செலவு செய்து 300 பிரதிகள் அச்சிடப்பட்டிருந்தது. பணிப்பாளரின் அங்கீகாரத்தின் அடிப்படையில் பிரதியொன்று ரூபா 500 இற்கு விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வுத் திகதியான 2016 மார்ச் 09 ஆந் திகதியளவில் 38 பிரதிகள் மாத்திரமே விற்பனை செய்யப்பட்டிருந்தன. எஞ்சிய 217 வெளியீடுகளின் விற்பனை தொடர்பாக முறையான வேலைத் திட்டமொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டில் பாதிடப்பட்ட வருமானத்திற்கும் உள்ளபடியான வருமானத்திற்கும் இடையே 71 சதவீதம் முதல் 150 சதவீதம் வரையும், பாதிடப்பட்ட செலவினத்திற்கும், உள்ளபடியான செலவினத்திற்கும் இடையே 61 சதவீதம் முதல் 287 சதவீதம் வரையுமான வீச்சிலும் பொருண்மையான முரண்கள் காணப்பட்டமையின் காரணமாக பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகளிலும் கட்டுப்பாடுகளிலுமுள்ள குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகத்தின் பணிப்பாளரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகளும் கட்டுப்பாட்டுத் துறைகளும் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) களஞ்சியக் கட்டுப்பாடு | நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட இருப்பு மீதிக்கும் பட்டோலைகளுக்கும் இடையே வேறுபாடு காணப்பட்டமை. |
| (ஆ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு | நிதிக்கூற்றுக்களின் பெறுமதிக்கும் நிலையான சொத்துப் பதிவேட்டின் பெறுமதிக்கும் இடையே வேறுபாடு காணப்பட்டமை.<br><br>நிலையான சொத்துப் பதிவேட்டில் சில சொத்துக்கள் கைப்பற்றப்பட்ட திகதி குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (இ) | நூலகக் கட்டுப்பாடு | நூலகப் புத்தக மெய்மையாய்வு செய்யப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்படாமை<br><br>மீண்டும் கையளிக்கப்படாமல் காலம் முடிவடைந்த புத்தகங்கள் காணப்பட்டமை |
| (ஈ) | வாகனக் கட்டுப்பாடு | எரிபொருள் நுகர்வு பரீட்சிக்கப்படாமை |